# TET Cum TRT-2018

# LP - TAMIL

1. The Sun God of Greek Civilization was

   1. **Apollo**
   2. Zeus
   3. Athena
   4. Poseidon

   கிரேக்க நாகரீகத்தின் சூரியக் கடவுள்

   1. **அப்பல்லோ**
   2. ஜீயஸ்
   3. ஏதெனா
   4. போஸிடான்

2. ‘Ranganathittu Bird Sanctuary’ is located in

   1. Tamil Nadu
   2. Kerala
   3. Andhra Pradesh
   4. **Karnataka**

   ‘ரங்கண்ணதிட்டு பறவைகள் சரணாலயம்’ அமைந்துள்ள இடம்

   1. தமிழ்நாடு
   2. கேரளா
   3. ஆந்திரப்பிரதேசம்
   4. **கர்நாடகா**

3. ‘NITI Aayog’ was founded in

‘நீதி ஆயோக்’ தொடங்கப்பட்ட ஆண்டு

1. 2014
2. **2015**
3. 2016
4. 2017

4. The number of General Elections conducted to the Lok Sabha during last 64 years by the Election Commission of India are

கடந்த 64 ஆண்டு காலத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்ட பொதுத் தேர்தல்களின் எண்ணிக்கை

1. 14
2. 15
3. **16**
4. 18

5. The National Library, Kolkata was originally known as

1. The Central Library
2. Library of Bengal
3. **Imperial Library**
4. Secretariat Library

கோல்கத்தாவிலுள்ள தேசிய நூலகம் முதலில் இவ்வாறு அழைக்கப்பட்டது

1. மத்திய நூலகம்
2. பெங்கால் நூலகம்
3. **இம்பீரியல் நூலகம்**
4. செயலக நூலகம்

6. 'Colonel' is the commissioned ranks in

1. Navy
2. Air Force
3. **Army**
4. Elephantry

'கலோனல்' என்பது இதில் உள்ள அதிகாரப்பதவி

1. கப்பற்படை
2. விமானப்படை
3. **இராணுவம்**
4. யானைப்படை

7. The musical instrument “Sitar” was invented by

1. **Amir Khusro**
2. Minhaj– us–Siraj
3. Ziauddin Barani
4. Firoz Shah

‘சிதார்’ இசைகக்கருவியைக் கண்டறிந்தவர்

1. **அமீர் குஸ்ரு**
2. மின்ஹாஜ் – உஸ் – சிராஜ்
3. ஜியாவுத்தீன் பரானி
4. பிரோஷ் ஷா

8. ‘Ayurveda’ literally means

1. Science of health
2. **Science of Life**
3. Science of healing
4. Science of nature

‘ஆயுர்வேதம்’ என்னும் சொல்லின் பொருள்

1. உடல்நலவியல்
2. **வாழ்வியல்**
3. குணப்படுத்தும் இயல்
4. இயற்கை இயல்

9. The largest silk manufacturer in the world is

1. Japan
2. India
3. Nepal
4. **China**

உலகின் மிகப்பெரிய பட்டு உற்பத்தியாளர்

1. ஜப்பான்
2. இந்தியா
3. நேபாளம்
4. **சீனா**

10. One of the following is Indirect Tax

1. Gift Tax
2. Proffession Tax
3. Corporation Tax
4. **Service Tax**

கீழ்க்கண்டவற்றில் மறைமுக வரி

1. வெகுமதி வரி
2. தொழில் வரி
3. நகராட்சி வரி
4. **சேவை வரி**

11. The first Governor of RBI is

1. **Sir Osborne Smith**
2. Y. H. Malegam
3. Dr. Anil Kakodkar
4. Dr. William Gaced

இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் கவர்னர்

1. **சர் ஆஸ்பார்ன் ஸ்மித்**
2. ஒய். ஹெச். மலிகாம்
3. டாக்டர். அனில் ககோட்கர்
4. டாக்டர். வில்லியம் கேசிட்

12. The expanded form of 'Wi-Fi' is

1. Wireless Fibre
2. **Wireless Fidelity**
3. With Fibre
4. Wireless Format

'Wi-Fi' ன் விரிவாக்கம்

1. வயர்லெஸ் ஃபைபர்
2. **வயர்லெஸ் ஃபைடிலிட்டி**
3. வித் ஃபைபர்
4. வயர்லெஸ் ஃபார்மேட்

13. The theme of the second edition of National Children's Film Festival was

1. Digital India
2. Swach Bharath
3. **Make in India**
4. Swarna Bharath

தேசிய குழந்தைகள் திரைப்பட விழாவின் இரண்டாம் தொகுப்பின் கருத்து

1. டிஜிட்டல் இந்தியா
2. சுவச் பாரத் ( தூய்மை இந்தியா )
3. **மேக் இன் இந்தியா**
4. சுவர்ண பாரதம்

14. India's first inter – planetary mission, completed two years in its orbit around

1. Venus
2. **Mars**
3. Mercury
4. Jupiter

இந்தியாவின் முதல் கண்டத்திற்கிடையிலான செயல்திட்டம் இக்கோளைச் சுற்றி தன் வட்டப் பாதையில் இரண்டாண்டுகளை நிறைவு செய்துள்ளது

1. வெள்ளி
2. **செவ்வாய்**
3. புதன்
4. வியாழன்

15. ‘Project Tiger’ was launched in the year

‘புலி செயல்திட்டம்’ தொடங்கப்பட்ட ஆண்டு

1. **1973**
2. 1978
3. 1991
4. 1948

16. Winner of Sahitya Academy Award – 2016 in Telugu Language is

1. Prabha Varma
2. Ravuri Bharadhwaja
3. C. Narayana Reddy
4. **Papineni Sivasankar**

2016 ல் தெலுங்கு மொழியில் சாகித்திய அகாதமி விருது வென்றவர்

1. பிரபா வர்மா
2. ராவூரி பரத்வாஜா
3. சி. நாராயண ரெட்டி
4. **பாபினேனி சிவசங்கர்**

17. The second decade announced by UN for the Eradication of poverty is

**ஏழ்மை ஒழிப்பிற்காக இரண்டாம் ஐக்கிய நாடுகள் தசாப்தம்**

1. 2006 - 2015
2. 2005 - 2014
3. **2008 - 2017**
4. 2011 - 2020

18. The Headquarters of World Trade Organization (WTO) is located at

1. **Geneva**
2. New York
3. Paris
4. Rome

**உலக வணிக மையத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம்**

1. **ஜெனிவா**
2. நியூயார்க்
3. பாரிஸ்
4. ரோம்

19. ‘Googly’ is the term used in this game

1. Football
2. Chess
3. **Cricket**
4. Golf

“கூக்ளி” என்னும் சொல் இவ்விளையாட்டில் பயன்படுத்தப்படுகிறது.

1. கால்பந்து
2. சதுரங்கம்
3. கிரிக்கெட்
4. கோல்ஃப்

20. The National Fruit of India is

1. Banana
2. **Mango**
3. Pine Apple
4. Orange

இந்தியாவின் தேசியக் கனி

1. வாழை
2. மா
3. அன்னாசி
4. ஆரஞ்சு

21. The Commission / Committee which suggested to introduce the "Socially useful and productive work" is

1. Mudaliar Commission
2. Hartog Committee
3. Kothari Commission
4. **Iswarbhai Patel Committee**

"சமூகப் பயன்பாட்டு உற்பத்தி பணி" யை அறிமுகப்படுத்த அறிவுறுத்திய குழு

1. முதலியார் குழு
2. ஹார்டாக் குழு
3. கோத்தாரிக் குழு
4. **ஈஸ்வர்பாய் பட்டேல் குழு**

22. "Education is something which makes man self – reliant and selfless" – defined by

1. Puranas
2. Upanishads
3. **Vedas**
4. Religious scriptures

"மனிதனை தற்சார்புடையவனாகவும் சுயநலமற்றவனாகவும் உருவாக்குவதே கல்வி" என்று வரையறை செய்தவை

1. புராணங்கள்
2. உபநிடதங்கள்
3. **வேதங்கள்**
4. மதநூல்கள்

23. The programme NPEGEL developed by SSA is meant for the following classes of girl children to remove the gender disparity

1. **1st to 8th class**
2. 6th to 8th class
3. 1st to 5th class
4. 1st to 7th class

பாலின வேற்றுமையைக் களைவதற்கு எஸ்.எஸ்.ஏ (SSA) வடிவமைத்த என்.பி.ஜி.ஈ.எல். (NPEGEL) செயல்திட்டம் இந்த வகுப்பு பெண்குழந்தைகளுக்குப் பொருந்தும்

1. **1 முதல் 8 ஆம் வகுப்பு**
2. 6 முதல் 8 ஆம் வகுப்பு
3. 1 முதல் 5 ஆம் வகுப்பு
4. 1 முதல் 7 ஆம் வகுப்பு

24. EFLU is located at

1. New Delhi
2. **Hyderabad**
3. Chennai
4. Bangaluru

EFLU அமைந்துள்ள இடம்

1. புதுடில்லி
2. **ஐதராபாத்**
3. சென்னை
4. பெங்களூரு

25. The objective of “Sakshar Bharat Mission” at the time of its inception is to achieve this percentage of literacy at National level

‘சாட்சர பாரத் மிஷன்’ தொடங்கப்பட்ட போது தேசிய அளவில் எழுத்தறிவு சதவீதத்தை அடைவதே அதன் நோக்கம்

1. 70

2. 75

**3. 80**

4. 85

26. The children with learning disabilities face this problem

**1. Dysphasia**

2. Myopia

3. Athetosis

4. Epilepsy

கற்றல் குறைபாடுள்ள குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினை

**1. டிஸ்பேசியா**

2. மயோபியா

3. அதிடாசிஸ்

4. எபிலெப்சி

27. The President of Academic Monitoring Committee at School level is

1. **Gram Sarpanch**
2. Headmaster
3. MPTC
4. Local Educationist

பள்ளி அளவில் கல்வி கண்காணிப்புக் குழுவின் தலைவர்

1. **கிராம சர்பஞ்ச்**
2. தலைமையாசிரியர்
3. எம்.பி.டி.சி
4. உள்ளூர் கல்வியாளர்

28. The State in which the mid day meal scheme was implemented for the first time in primary schools in India was

1. Andhra Pradesh
2. **Tamil Nadu**
3. Madhya Pradesh
4. Uttar Pradesh

இந்தியாவில் முதன்முதலில் ஆரம்பப் பள்ளியில் மதிய உணவு திட்டத்தை நடைமுறைப்படுத்திய மாநிலம்

1. ஆந்திரப் பிரதேசம்
2. **தமிழ்நாடு**
3. மத்தியப் பிரதேசம்
4. உத்திரப் பிரதேசம்

29. According to the National Child Rights Protection Act – 2005, the child means, child belongs to this age

1. 0 - 12 years
2. 6 - 14 years
3. 6 - 16 years
4. **0 - 18 years**

தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்– 2005 ன் படி குழந்தை என்றால் இந்த வயதுடையவர்கள்

1. 0 – 12 வருடங்கள்
2. 6 – 14 வருடங்கள்
3. 6 – 16 வருடங்கள்
4. **0 – 18 வருடங்கள்**

30. The National Institute that serves to preserve our culture and traditions throughout our Nation

நாடு முழுவதும் நம் கலாச்சாரம் மற்றும் பண்பாடுகளை பாதுகாக்க சேவைபுரியும் தேசிய நிறுவனம்

1. CIET
2. NCTE
3. **CCRT**
4. NCERT

31. Students who do not like Mathematics, exhibit

1. Low intelligence
2. Learning difficulty
3. **Attitude**
4. Personality

மாணவர்கள் கணிதத்தை விரும்பாமல் போவது இதைக் காட்டுகிறது.

1. குறைவான நுண்ணறிவு
2. கற்றல் கடினத்தன்மை
3. **மனப்பான்மை**
4. ஆளுமை

32. The energy the Id produces to obtain pleasure is

1. Tension
2. **Libido**
3. Motivation
4. Passion

மகிழ்ச்சியைப் பெறுவதற்கு அகத்தால் உற்பத்தி செய்யப்படும் ஆற்றல்.

1. மன இறுக்கம்
2. **பால் உணர்வு**
3. ஆயத்தப்படுத்துதல்
4. பேரார்வம்

33. Teaching students to combine ideas in novel ways will promote

1. **Creativity**
2. Language skill
3. Daydreaming
4. Knowledge

சிந்தனைகளை புதிய முறையில் இணைத்து மாணவர்களுக்கு கற்பித்தலால் இதை வளர்க்கலாம்.

1. **ஆக்கத் திறன்**
2. மொழித் திறன்
3. பகல்கனவு காணுதல்
4. அறிவு

34. The ability to create, communicate and understand meanings made of sound along with mechanisms dedicated to sound quality

1. Linguistic Intelligence
2. **Musical Intelligence**
3. Spatial Intelligence
4. Interpersonal Intelligence

ஒலி தரத்திற்குத் துணைபுரியும் முறைகளுடன் செய்யப்பட்ட ஒலிகளின் பொருளை அறிதல், படைத்தல், தகவல் தொடர்பு திறன் ஆகியவை இதைக் காட்டும்.

1. மொழி சார்ந்த நுண்ணறிவு
2. **இசை சார்ந்த நுண்ணறிவு**
3. இடம் சார்ந்த நுண்ணறிவு
4. நபருக்குள்ளார்ந்த நுண்ணறிவு

35. Children being taught to help each other in the class which increases helping behaviour involve

1. Conditioning
2. Trial and Error Learning
3. **Observational Learning**
4. Rote Learning

வகுப்பில் மாணவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளும்படி கற்பிக்கப்படுவதால் அவர்களில் உதவி செய்யும் பண்பு அதிகரிக்கிறது. இதில் அடங்கி இருப்பது

1. ஆக்கநிலையிறுத்தம்
2. முயன்று தவறிக் கற்றல்
3. **உற்றுநோக்கிக் கற்றல்**
4. மனப்பாடம் மூலம் கற்றல்

36. Responses that satisfy are more likely to be repeated is

1. Law of whole
2. Law of frequency
3. Law of Recency
4. **Law of Effect**

மனநிறைவு தரும் துலங்கல்கள் பலமுறை திரும்பவும் நிகழ வாய்ப்பு இருப்பது என்பது.

1. மொத்த விதி
2. அலைவெண் விதி
3. புதுமை விதி
4. **விளைவு விதி**

37. Process by which information is recorded in a form usable by memory is

1. Storage
2. **Encoding**
3. Retrieval
4. Imaginal Code

நினைவைப் பயன்படுத்தி ஒரு வடிவில் தகவல் பதிவு செய்யப்படும் செயல்முறை

1. சேமித்தல்
2. **குறிமுறையேற்றம்**
3. வெளிக்கொணர்தல்
4. கற்பனைக் குறியீடு

38. A harmonious relationship of an individual to her/his environment which affords a person comfortable life is

1. **Adjustment**
2. Abnormality
3. Anxiety
4. Accommodation

ஒரு மனிதன் தன் சுற்றுப்புறத்துடன் ஓர் இணக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதன் வாயிலாக வசதியான வாழ்க்கையை நடத்துதல் என்பது

1. **பொருத்தப்பாடு**
2. அசாதாரண நிலை
3. கவலை
4. தகவேற்பு

39. Sensing what people are feeling, being able to take their perspective, and cultivating rapport and attunement with a broad diversity of people

1. Sympathy
2. Arousal
3. **Empathy**
4. Compliance

**மக்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளுதல், அவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் திறன் மற்றும் வேற்றுமைகளைக் கொண்ட மக்களுடன் சமரசம் மற்றும் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுதல் என்பது**

1. **கருணை**
2. **எழுச்சி**
3. **பிறர் நிலை உணர்தல் (Empathy)**
4. **சம்மதம்**

40. Children watching violence in T.V and movies increases

1. Happiness
2. **Aggression**
3. Affiliation
4. Attachment

தொலைக்காட்சியிலும் திரைப்படங்களிலும் வன்முறைக் காட்சிகளைப் பார்க்கும் குழந்தைகளில் அதிகரிப்பது

1. மகிழ்ச்சி
2. **ஆக்கிரமிப்புத் தன்மை**
3. நெருக்கம்
4. பாசம்

# CONTENT

41. களவழி நாற்பது என்னும் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட நாடகம்

    1. ரூபாவதி
    2. **மனோகரா**
    3. சதி அனுசுயா
    4. மானவிஜயம்

42. "ஆமை வடைக்காய் அரைஞாண் பணயம்
    போளிக் காகப் புத்தகம் பணயம்"
    – இப்பாடல் இடம்பெறும் நூல்

    1. தனிப்பாடல் திரட்டு
    2. மருமக்கள் வழி மான்மியம்
    3. பொதுமை வேட்டல்
    4. **அழகின் சிரிப்பு**

43. மேரி கியூரிக்கு இரண்டாவது முறை நோபல் பரிசு இக்கண்டுபிடிப்பிற்காக வழங்கப்பட்டது

1. **ரேடியத்தின் அணு எடை**
2. பொலோனியம்
3. ரேடியம்
4. செயற்கைக் கதிர்வீச்சு

44. ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்

ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்

– எனப் பாடியவர்

1. அண்ணாமலையார்
2. குமரகுருபரர்
3. **திரிகூடராசப்பக்கவிராயர்**
4. திரு.வி. கலியாணசுந்தரனார்

45. அந்தகக்கவி வீரராகவர் இயற்றிய நூல்களில் இல்லாதவை

1. திருச்செந்திற்கலம்பகம்
2. சேயூர்க்கலம்பகம்
3. சந்திரவாணன் கோவை
4. **திருக்கழுக்குன்றப் புராணம்**

46. முதல் நாள் போரில் தன் தந்தையையும், இரண்டாம் நாள் போரில் கணவனையும், மூன்றாம் நாள் போரில் மகனையும் பறிகொடுத்த பெண்ணின் வீரத்தைப் பாடியவர்

**(1.) ஔவையார்**

2. ஒக்கூர் மாசாத்தியார்

3. காக்கைப் பாடினியார்

4. வெள்ளி வீதியார்

47. அறிவெனப் படுவது

1. கூறியது மறாஅமை

2. பாடு அறிந்து ஒழுகுதல்

**(3.) மறைபிறர் அறியாமை**

4. பேதையார் சொல் நோன்றல்

48. எண்ணமுற லாகித்த னிதயத் துள்ளே
யினைபல மொழிகூறி யிரங்கு வானால்

– இக்கூற்று இவருடையது

1. குகன்

**(2.) நளன்**

3. விதுரன்

4. இராமன்

49. “நேர்மையைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை” என்னும் உணர்வோடு நடுநிலைமைப் பண்போடு ஆட்சி நடத்தி நற்பெயர் பெற்றவன்

1. கிருட்டின முத்துவீரப்பன்
2. **சொக்கநாதர்**
3. முத்துவீரப்பன்
4. விசயரங்கச் சொக்கநாதர்

50. நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்

நேர்உறக் கண்டுளந் துடித்தேன் – எனும் பாடல் வரிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

1. திருவருட்பா
2. திருவாசகம்
3. **இன்னாநாற்பது**
4. திருவாய்மொழி

51. ‘செய்’ என்பதன் பொருள்

1. **அருகில்**
2. குழந்தை
3. செம்மை
4. வயல்

52. ‘யானை’ எனப் பொருள் தரும் பல சொற்கள்

1. களிறு, பிடி, கேழல்
2. பகடு, கம்பமா, கைம்மா
3. களபம், எண்கு, அரி
4. **மாதங்கம், மரை, கலாபம்**

53. ‘நிறை’ என்பதன் இருபொருள்

1. அதிகம், பசு
2. **படை, கரடி**
3. முழுவதும், தராசு
4. கூட்டம், வில்

54. சிறு வயதிலேயே பெண்களுக்கு திருமணம் செய்வதெல்லாம் இன்று

1. மலையேறிவிட்டது
2. பெருஞ்செலவாணி
3. **ஓலை வந்துவிட்டது**
4. வாழையடி வாழையாக

55. ‘அனுமதி’ இப்பிறமொழிச் சொல்லிற்கு நிகரான தமிழ்ச் சொல்

1. **வல்லுநர்**
2. இசைவு
3. வழிபாடு
4. விருப்பம்

56. ‘மூவிடம்’ இத்தொகைச் சொல்லை விரித்துக் காண்

1. அறம், பொருள், இன்பம்
2. மா, பலா, வாழை
3. தன்மை, முன்னிலை, படர்க்கை
4. **சேர, சோழ, பாண்டியர்**

57. ‘பறி’ என்பது இவ்வழக்காகும்

1. இலக்கணப்போலி
2. **இடக்கரடக்கல்**
3. மங்கலம்
4. குழூஉக்குறி

58. ‘கரிகாலன் நாளை வந்தான்’ என்பது இவ்வழு ஆகும்

1. **இட**
2. மரபு
3. கால
4. திணை

59. ‘வெள்ளெயிறு’ என்பது இவ்வாறு பிரியும்

1. வெள் + எயிறு
2. வெண் + எயிறு
3. **வெள் + ளெயிறு**
4. வெண்மை + எயிறு

60. அருமை + சொல் என்பது இவ்வாறு சேரும்

1. அருஞ்சொல்
2. அருமைச்சொல்
3. அருசொல்
4. **அருமைசொல்**

61. மூன்றாம் வேற்றுமையின் சொல்லுருபு

1. **பொருட்டு**
2. கொண்டு
3. நிமித்தம்
4. இருந்து

62. ஆக்கல், அழித்தல், அடைதல், ஒத்தல் போன்ற பொருளில் வரும் வேற்றுமை

1. இரண்டாம்
2. மூன்றாம்
3. **நான்காம்**
4. ஐந்தாம்

63. ‘கருங்கண்’ என்பது இவ்வகைத் தொகையாகும்

1. வினைத்தொகை
2. **பண்புத்தொகை**
3. உம்மைத்தொகை
4. உவமைத்தொகை

64. பாடம் கனிமொழியால் படிக்கப்பட்டது

– இது இவ்வகைத் தொடராகும்

1. செய்வினை
2. தன்வினை
3. செயப்பாட்டு வினை
4. **பிறவினை**

65. வல்லினம் மிகா இடங்களில் ஒன்று

1. **சுட்டெழுத்து முன்**
2. வன்தொடர் குற்றியலுகரத்திற்கு முன்
3. நான்காம் வேற்றுமை விரியின் முன்
4. எழுவாய்த் தொடரில்

66. 'செந்தமிழ்' என்பது இவ்விதிகளின்படி புணர்ந்தது

1. ஈறுபோதல், தன்னொற்றிரட்டல்
2. **ஈறுபோதல், இனமிகல்**
3. ஈறுபோதல், அடி அகரம் 'ஐ' ஆதல்
4. ஈறுபோதல், ஆதிநீடல்

67. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று எல்லா அடிகளும் நாற்சீர் அடிகளாய் வருவது

1. **நிலைமண்டில ஆசிரியப்பா**
2. அடிமறிமண்டில ஆசிரியப்பா
3. இணைக்குறள் ஆசிரியப்பா
4. நேரிசை ஆசிரியப்பா

68. தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின் – இக்குறட்பாவின் முதல் அடியில் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுத்திருப்பதால் இது, இவ்வகை மோனையாகும்

1. இணை மோனை
2. ஒரூஉ மோனை
3. **கூழை மோனை**
4. பொழிப்பு மோனை

69. உவமையைக் கூறி பொருளைப்பெற வைப்பது

1. தற்குறிப்பேற்ற அணி
2. வேற்றுமை அணி
3. **உவமை அணி**
4. பிறிதுமொழிதலணி

70. கீழ்க்காணுபவற்றுள் எதிர்மறை இடைநிலை

1. ஆ
2. **கிறு**
3. இன்
4. ப்

71. ‘வந்தனன்’ இச்சொல்லிற்கு பகுபத உறுப்பிலக்கணம்

1. **வா + ந் + த் + அன் + அன்**
2. வா + த் + அன் + அன்
3. வா + த்(ந்) + த் + அன் + அன்
4. வா + ந் + த் + அன்

72. ‘விளித்தான்’ என்பது இவ்வகைச் சொல்லாகும்

1. பெயர் இயற்சொல்
2. பெயர்த் திரிசொல்
3. வினை இயற்சொல்
4. **வினைத் திரிசொல்**

73. இது தனித்து வந்தால் பொருள் தராது; பெயர்ச் சொற்கள் வினைச் சொற்கள் சார்ந்தே வரும்

1. திசைச் சொல்
2. இடைச் சொல்
3. **வட சொல்**
4. உரிச்சொல்

74. ஒரு தொடரில் செயல் அல்லது தொழில் நிகழ்வதை மறுப்பின்றி ஏற்பது

1. எதிர்மறைத் தொடர்
2. **உடன்பாட்டுத் தொடர்**
3. கலவைத் தொடர்
4. தொடர்நிலைத் தொடர்

75. ஒரு செயலை செய்யும்போது தனக்கு வரப்போவதை விடையாகக் கூறுவது

1. இனமொழி
2. உற்றது உரைத்தல்
3. **நேர்விடை**
4. உறுவது கூறல்

76. உடைந்த ஏரியைப் பார்க்க ஊரே திரண்டு வந்தது.

– இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர்

1. **இடவாகுபெயர்**
2. பண்பாகுபெயர்
3. தொழிலாகுபெயர்
4. சினையாகுபெயர்

77. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று

– இக்குறட்பாவில் அமைந்துள்ள அணி

1. எடுத்துக்காட்டு உவமையணி
2. உருவக அணி
3. இல்பொருளுவமையணி
4. **வேற்றுமை அணி**

78. ‘திருவள்ளுவரைப் படித்துப் பார்’ என்பது இவ்வகை ஆகுபெயராகும்

1. காரியவாகு பெயர்
2. கருத்தாவாகு பெயர்
3. **தானியாகு பெயர்**
4. கருவியாகு பெயர்

79. ‘வீழ்கதிர்’ இச்சொல்லிற்கு இலக்கணக் குறிப்பு

1. வியங்கோள் வினைமுற்று
2. **பண்புத்தொகை**
3. வினையாலணையும் பெயர்
4. வினைத்தொகை

80. ‘உறுவேனில்’ இச்சொற்றொடருக்கு இலக்கணக் குறிப்பு

1. **இடைச் சொற்றொடர்**
2. வினையெச்சம்
3. உம்மைத் தொகை
4. உரிச்சொற்றொடர்

81. தென்கலை வைணவர்களின் திருமணத்தின் போது தவறாமல் ஓதப்படும் பாடல்

1. வாரணம் ஆயிரம்
2. ஓங்கி உலகளந்த உத்தமன்
3. பற்று மஞ்சள் பூசி
4. **மன்னுபுகழ்**

82. யவனக் குடியிருப்பு இருந்ததென இவ்விடத்தை அகழாய்வு செய்தபோது தெரிந்தது

1. கீழார்வெளி
2. ஆதிச்சநல்லூர்
3. **அரிகாமேடு**
4. கரூர்

83. யாயும் ஞாயும் யாரே கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
– இவ்வடிகள் இடம்பெறும் நூல்

1. **அகநானூறு**
2. குறுந்தொகை
3. புறநானூறு
4. நற்றினை

84. மக்கட் சமுதாயத்தை அல்வழி நீக்கி நல்வழிப்படுத்த எழுந்த ஒரு சீர்திருத்த காவியம் என்று போற்றப்படுவது

1. **மணிமேகலை**
2. சிலப்பதிகாரம்
3. சீவக சந்தாமணி
4. கம்பராமாயணம்

85. ‘வாழ்க்கை குறிப்புகள்’ எனும் தலைப்பில் இவர் தன் வாழ்க்கை வரலாற்றினை எழுதினார்

1. கண்ணதாசன்
2. **திரு.வி. கலியாணசுந்தரனார்**
3. உ.வே. சாமிநாதர்
4. நாமக்கல் கவிஞர்

86. ‘வேருக்கு நீர்’ இந்நாவலை எழுதியவர்

1. இராஜம் ராமமூர்த்தி
2. சூடாமணி
3. **இராஜம் கிருஷ்ணன்**
4. லஷ்மி

87. ஆட்டுவித்தால் ஆர்ஒருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆர்ஒருவர் அடங்கா தாரே
– எனும் பாடல் வரிகளைப் பாடியவர்

1. மாணிக்கவாசகர்
2. திருஞானசம்பந்தர்
3. சுந்தரனார்
4. **திருநாவுக்கரசர்**

88. ‘புலவு துறந்த பெரியோர்’ எனப் போற்றப்படுபவர்

1. சேனாவரையர்
2. **இளம்பூரணர்**
3. பரிமேலழகர்
4. அடியார்க்கு நல்லார்

89. தமிழ் இலக்கியத் துறையில் பிள்ளைத் தமிழ் என்னும் துறையை வகுத்த பெருமை இவரையே சாரும்

1. **ஒட்டக்கூத்தர்**
2. பரிமேலழகர்
3. வில்லிபுத்துரார்
4. புகழேந்திப் புலவர்

90. இவ்விலக்கியம் குதிரைப் பந்தயம் போல தொடக்கமும் முடிவும் சுவை மிக்கனவாக இருத்தல் வேண்டும் என்பார் செட்ஜ்விக்

1. நாடகம்
2. நாவல்
3. **சிறுகதை**
4. கடிதம்

91. பொது மொழியிலிருந்து வேறுபட்டு இயல்பாக அமையும் மொழி

1. குறு மொழி
2. **கிளை மொழி**
3. சிறப்பு மொழி
4. இலக்கிய மொழி

92. பழந்தமிழ் இலக்கியம் ஆந்திரரை இவ்வாறு கூறுகிறது

1. திராவிடர்
2. தெலுங்கர்
3. ஆரியர்
4. **வடுகர்**

93. திராவிட மொழியும், வட மொழியும் கலந்து பேசிய மொழி

1. **பாலி மொழி**
2. வேத மொழி
3. அரபு மொழி
4. சிங்கள மொழி

94. “பேச்சு மொழி ஓடும் ஆறு போன்றது என்றும் எழுத்து மொழி அந்த ஆற்றில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது” என்று கருதுபவர்

1. பிரிஸ்
2. யெஸ்பர்ஸன்
3. **வெண்ட்ரியே**
4. பில்லுஸ்புரி

95. மக்களின் நாகரிக வளர்ச்சிக்கு காரணம் என்று கூறத்தக்கது

1. அச்சம்
2. **போலச் செய்தல்**
3. வீரம்
4. உணர்ச்சி

96. ‘கஜானா’ என்பது இம்மொழிச் சொல்லாகும்

1. **அரபு**
2. இந்துஸ்தானி
3. போர்த்துகீசியம்
4. பாரசீகம்

97. தொழில் முதலான காரணம் பற்றி குழுவினர்களுக்குள் அமையும் மொழி

1. பொது மொழி
2. **சிறப்பு மொழி**
3. கிளை மொழி
4. குறு மொழி

98. தமிழ் என்ற சொல்லுக்கு நேரான வடசொல் திராவிடம் என்று இவர் எடுத்துக்காட்டியுள்ளார்

1. யெப்பர்ஸன்
2. தொல்காப்பியர்
3. **கால்டுவெல்**
4. வெண்ட்ரியே

99. தெலுங்கு கன்னட எழுத்து முறை இவ்வெழுத்துக்களை ஒட்டி அமைந்தது

1. தமிழ்
2. கிரந்த
3. பாலி
4. **தேவநாகரி**

100. இவர் தமிழ் மொழியைத் திராவிடர்களின் சமயப் பெருமொழி எனப் போற்றியுள்ளார்

1. **சி.ஆர். ரெட்டி**
2. நா. சுப்பு ரெட்டியார்
3. மாக்சுமுல்லர்
4. ஜி.யு. போப்

101. செய்யுள் வடிவில் அமைந்தவை

1. சிறுகதை
2. **காவியம்**
3. புதுக் கவிதை
4. கட்டுரை

102. மனிதன் படைத்துக்கொண்ட நாகரிகக் கருவிகளுள் மிகச் சிறந்தது

1. இலக்கியம்
2. நாடகம்
3. இசை
4. **மொழி**

103. மதிப்புப் பற்றியும், உணர்த்தும் திறன் பற்றியும் அறிவன அறிந்தவரே இலக்கிய ஆராய்ச்சிக்கு உரியவர் என்று கூறியவர்

1. ஜே.எம். முர்ரி
2. மாத்யூ ஆர்னால்ட்
3. **ரிச்சர்ட்ஸ்**
4. வெண்டிரியோ

104. ஆராய்ச்சியாளின் தகுதிகளில் இல்லாதவை

1. **கண் மூடிப் போற்றுதல்**
2. மதிப்பை அளந்து கூறுதல்
3. ஏற்றத் தாழ்வுகளை அறிந்து வேறுபடுத்தல்
4. இலக்கிய அனுபவம் பெறுதல்

105. ஒரு மனத்திலிருந்து மற்றொரு மனத்திற்கு அந்த அனுபவம் மாறி அமைவது

1. வடிவம்
2. நுகர்தல்
3. கற்பனை
4. **உணர்த்தல்**

106. உணர்ச்சியும் கற்பனையும் கொண்டு வளர்வது

1. அறிவியல்
2. சமூகவியல்
3. **கலை**
4. வானியல்

107. கான மஞ்ஞை அறைஈன் முட்டை

வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்

குன்ற நாடு... - இப்பாடலில் அமைந்துள்ள கற்பனை

1. இயைபுக் கற்பனை
2. **படைப்பு கற்பனை**
3. கருவியாக்க கற்பனை
4. உறுதுணை

108. கலை வடிவம் பெறும் கனவு

1. விரும்புக்கு மாறான கனவு
2. விடியற்காலை கனவு
3. அச்சம் தரும் கனவு
4. **கற்பனைக் கனவு, பகற்கனவு**

109. ஆங்கில இலக்கியத்தில் உள்ள காதல் பாட்டுகளில் இது மிகுதியாகப் பாடப்பட்டது

1. இன்பம்
2. கல்வி
3. **துன்பம்**
4. அன்பு

110. கலைக்கு இன்றியமையாத உறுப்புகள்

1. **உணர்ச்சி, கற்பனை, வடிவம்**
2. உணர்ச்சி, வீரம், கருத்து
3. உணர்ச்சி, இரக்கம், அன்பு
4. காதல், உணர்ச்சி, கற்பனை

111. முன்னிலையைக் குறிக்கும் பெயர்

1. நாங்கள்
2. **நீங்கள்**
3. அவர்கள்
4. நான்

112. ‘திருக்குறள்’ – இச்சொல்லிற்கு மாத்திரை

1. ஏழு
2. ஆறு
3. நான்கு
4. **ஐந்து**

113. கீழ்க்காணுபவற்றுள் இனவெழுத்துச் சொல்

1. வாய்மை
2. வேகம்
3. **மஞ்சள்**
4. மதுரை

114. ‘கணகண’ இச்சொல் இவ்வகையாகும்

1. அடுக்குத்தொடர்
2. **இரட்டைக்கிளவி**
3. அளபெடை
4. வினா

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி

தமிழ்நாட்டு மலையும் நதியும் இன்றைய இயற்கைப் பொருள்களும் அவர் தேவாரப் பாட்டிலே படமெடுத்துக் காட்டப்படுகின்றன. மந்த மாருதம் வந்துலாவும் திருக்குற்றால மலையில் வாழும் மந்தியினை அவர் பாடலில் காணலாம். கண்ணுக்கினிய நிறமும் காதுக்கினிய மொழியும் வாய்ந்த கிளிகளைக் காணலாம். சோலையிலே பறந்துதிரியும் கிளியை நோக்கி அவர் பேசும் முறையினைக் காண்போம். இளங்கிளியே! இங்கே வா; பாலும் தேனும் கலந்து உனக்குப் பருகத் தருவேன். நீ உனது இனிய மொழியில் எனது ஈசன் திருநாமத்தை ஒரு முறை பேசாயோ? என்று திருஞானசம்பந்தர் வேண்டுகிறார்.

115. பத்தியின் மையக் கருத்து

1. **திருஞானசம்பந்தரின் பாடல் நயம்**
2. குற்றால மலை
3. திருஞானசம்பந்தரின் பாடல்
4. கிளி

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி

தமிழ்நாட்டு மலையும் நதியும் இன்றைய இயற்கைப் பொருள்களும் அவர் தேவாரப் பாட்டிலே படமெடுத்துக் காட்டப்படுகின்றன. மந்த மாருதம் வந்துலாவும் திருக்குற்றால மலையில் வாழும் மந்தியினை அவர் பாடலில் காணலாம். கண்ணுக்கினிய நிறமும் காதுக்கினிய மொழியும் வாய்ந்த கிளிகளைக் காணலாம். சோலையிலே பறந்துதிரியும் கிளியை நோக்கி அவர் பேசும் முறையினைக் காண்போம். இளங்கிளியே! இங்கே வா; பாலும் தேனும் கலந்து உனக்குப் பருகத் தருவேன். நீ உனது இனிய மொழியில் எனது ஈசன் திருநாமத்தை ஒரு முறை பேசாயோ? என்று திருஞானசம்பந்தர் வேண்டுகிறார்.

116. 'மந்த மாருதம்' என்பதன் பொருள்

1. இமயமலை
2. **மெல்லிய காற்று**
3. காட்டு விலங்குகள்
4. பறவைகள்

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி

தமிழ்நாட்டு மலையும் நதியும் இன்றைய இயற்கைப் பொருள்களும் அவர் தேவாரப் பாட்டிலே படமெடுத்துக் காட்டப்படுகின்றன. மந்த மாருதம் வந்துலாவும் திருக்குற்றால மலையில் வாழும் மந்தியினை அவர் பாடலில் காணலாம். கண்ணுக்கினிய நிறமும் காதுக்கினிய மொழியும் வாய்ந்த கிளிகளைக் காணலாம். சோலையிலே பறந்துதிரியும் கிளியை நோக்கி அவர் பேசும் முறையினைக் காண்போம். இளங்கிளியே! இங்கே வா; பாலும் தேனும் கலந்து உனக்குப் பருகத் தருவேன். நீ உனது இனிய மொழியில் எனது ஈசன் திருநாமத்தை ஒரு முறை பேசாயோ? என்று திருஞானசம்பந்தர் வேண்டுகிறார்.

117. ‘இங்கே வா’ இச்சொல்லிற்கு இலக்கணக் குறிப்பு

1. பெயரெச்சம்
2. வியங்கோள் வினைமுற்று
3. **விளி வேற்றுமை**
4. வினையெச்சம்

கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி

கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
கொழுநனுக்கும் காணிமலை பழநிமலை அம்மே
எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே
இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே

118. மேற்காணும் பாடல் இச்சிற்றிலக்கியத்திற்கு தொடர்புடையது

1. பரணி
2. பள்ளு
3. உலா
4. **குறவஞ்சி**

கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி

கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
கொழுநனுக்கும் காணிமலை பழநிமலை அம்மே
எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே
இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே

119. 'எல்' என்பதன் பொருள்

1. தானியம்
2. **சூரியன்**
3. நிலவு
4. விலங்கு

கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி

கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
கொழுநனுக்கும் காணிமலை பழநிமலை அம்மே
எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே
இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே

120. இப்பாடலில் இயைபு நயம் தரும் சொற்கள்

1. **அம்மே, அம்மே**
2. தமையன், இளையாள்
3. காணிமலை, எல்லுலவும்
4. கொழுநன், பழநிமலை

121. “எவற்றைக் கற்பிப்பது” என்னும் வினாவிற்கு விடையாக அமைவது

1. பாடநூல்
2. நூலகம்
3. புறத்தோற்றம்
4. **கல்வி ஏற்பாடு**

122. ஒரு நூலில் உள்ள கருத்துகள், சொற்றொடர்களையும், சிறப்புகள் சொல்லாட்சி முதலிய அனைத்தையும் படித்து அறிதல்

1. அகன்ற படிப்பு
2. **ஆழ்ந்த படிப்பு**
3. சொல் முறை படிப்பு
4. சொற்றொடர் முறை படிப்பு

123. சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கு பெரிதும் துணை புரிவது

1. செய்யுள்
2. இலக்கணம்
3. **உரைநடை**
4. கவிதை

124. ஒரு படம் ஆயிரம் சொற்களுக்கு நிகராகும் என்னும் சீன பழமொழியைக் கூறியவர்

1. **பேகன்**
2. ராபர்ட்ஸ்
3. ஜான்டூயி
4. மெக்கஷன்

125. சில பண்புகள் பற்றிய உண்மைகளை விளக்கும் கட்டுரை

1. விவாதக் கட்டுரை
2. **சிந்தனைக் கட்டுரை**
3. ஆய்வுக் கட்டுரை
4. தருக்கியல் கட்டுரை

126. அகன்ற படிப்புக்கு உகுந்த இடம்

1. வகுப்பறை
2. விளையாட்டு திடல்
3. **நூலகம்**
4. வீடு

127. சீரும் தளையும் அடியும் உடையது. ஒலிநயம் உடையது. உணர்ச்சியும் கற்பனையும் இல்லாமல் இயற்றப்பெறுவது சோதிடம், மருத்துவம், நீதி முதலியவற்றை எடுத்துக் கூறுவது

1. உரைநடை
2. கவிதை
3. இலக்கணம்
4. **செய்யுள்**

128. மொழி ஆசிரியரின் பண்புகளில் இல்லாதது

1. இலக்கண இலக்கிய புலமை
2. தவறுகளை திருத்தும் பண்பு
3. திறமையாக எழுதும் திறன்
4. **கலையார்வமின்மை**

129. மாணவர் தம் அறிவைப் புதிய சூழ்நிலையில் பயன்படுத்தும் தன்மையானவற்றைக் குறிக்கும் வினாக்கள்

1. உயர்நிலை வினாக்கள்
2. **இடைநிலை வினாக்கள்**
3. சாதாரண வினாக்கள்
4. குறு வினாக்கள்

130. இக்கற்பித்தல் முறை பொறிகளுக்கும், கற்பனைக்கும், நினைவாற்றலுக்கும், உணர்ச்சிக்கும் நல்ல முறையீடு செய்கின்றது

1. **நடிப்பு முறை**
2. எழுத்து முறை
3. விளையாட்டு முறை
4. சொற்றொடர் முறை

131. பல்வகைத் தூண்டல்களின் உட்கூறுகளில் ஒன்று

1. முன்னறிவுடன் இணைப்பு
2. ஏற்ற விடைத் தந்தமை
3. **வினை மாற்றம்**
4. தொடர்ச்சி

132. தான் தொடங்காற்றல், பொறுப்புணர்ச்சி, திட்டமிட்டு நிறைவேறுதல், மதிப்பிடல், கூட்டுறவு மனப்பான்மை போன்ற பண்புகளை இம்முறை மாணவரிடம் வளர்க்கின்றது

1. மேற்பார்வை படிப்பு முறை
2. நடிப்பு முறை
3. விளையாட்டு முறை
4. **செயல்திட்ட முறை**

133. இவர், “மனிதனுடைய தனித்தன்மையின் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி” என்கிறார்

1. **சுவாமி விவேகானந்தர்**
2. காந்தியடிகள்
3. மாண்டிச்சோரி
4. பாணினி

134. மொழியைக் கையாளுதல் என்பதில் அடங்கும் திறன்கள்

1. கேட்டல், எழுதுதல்
2. **பேசுதல், எழுதுதல்**
3. கேட்டல், படித்தல்
4. பேசுதல், படித்தல்

135. தமிழில் இலக்கணங்களுக்கு வரைகள் அமைத்த முறையினைக் காணும்போது இம்முறை பயன்படுத்தப்பட்டுள்ளது

1. விதி வருமுறை
2. வினா – விடை முறை
3. **விதிவிளக்க முறை**
4. தடை விடை முறை

136. இம்முறையில் மனப்பாடம் மிகச் சிறப்பாக இடம் பெற்றிருந்தது

1. காரண காரிய முறை
2. உயத்துணரும் முறை
3. உரையாடல் முறை
4. **நெட்டுரு முறை**

137. குழந்தைகளுக்கான கல்வி கைத்தொழில் ஒன்றைக் கொண்டு குழந்தைகள் சார்பாக அமைதல் வேண்டும் என்று கூறியவர்

1. மாண்டிச்சோரி
2. **காந்தியடிகள்**
3. பிரோபெல்
4. ஜான்டூயி

138. கணினி வழியாக கேட்டல் சூழல் நிகழ்ச்சிகளையே திரையில் காட்சிப்படுத்த முடியும். அவ்வாறு காட்சிப்படுத்தலை இவ்வாறு கூறுவர்

1. **உருப்போலி**
2. குறுந்தட்டு
3. நெகிழி
4. நினைவு

139. வகுப்பறை ஒழுங்கின் தன்மைகளில் இல்லாதவை

1. அடக்குதல்
2. கீழ்ப்படிதல்
3. பொறுப்பு
4. **மாணவர்களின் தன்னம்பிக்கை இன்மை** (circled)

140. கற்பித்துக் கொண்டிருக்கும்போது மாணவர்களிடம் கற்றல் நிகழ்வதை அறியத்தக்க தேர்வு

1. நிலையறி தேர்வு
2. தொகுப்புத் தேர்வு
3. **வளர்வறி தேர்வு** (circled)
4. பருவத் தேர்வு

141. மொழிப் பாடக் கற்பிப்பின் மிக உயரிய நோக்கம்

1. **கல்வியியல் விழுமங்களைப் பதித்தல்** (circled)
2. மதிப்பீடு
3. சரியான உச்சரிப்பு
4. குறை தவிர்த்தல்

142. பயிற்று முறைகளில் இது ஆசிரியர் மைய முறை எனலாம்

1. விளையாட்டு முறை
2. நடிப்பு முறை
3. செய்வழி கற்றல் முறை
4. **விரிவுரை முறை**

143. ‘டால்டன் திட்டம்’ எனும் வேறு பெயரும் இம்முறைக்கு உண்டு

1. விதி விளக்க முறை
2. **ஒப்படைப்பு முறை**
3. கண்டறி முறை
4. கதை முறை

144. துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்களில் இல்லாதவை

1. விரைவாகப் படிக்கும் திறன்
2. சொற்களஞ்சியப் பெருக்கம்
3. **இலக்கண அறிவு பெறுதல்**
4. கருத்துணர் திறன் வளர்த்தல்

145. குழந்தைகளுக்கு கேட்டல் திறனை வளர்ப்பதற்கும் சிந்தனை கிளர்ச்சிக்கும் இது சிறந்த பழகு செயலாகும்

1. பாட்டு
2. **விடுகதை**
3. விளையாட்டு
4. கேட்டு எழுதுதல்

146. மனவியல் சார்ந்த துறைகளில் இத்திறன் பெரிதும் பயன்படுகிறது

1. கேட்டல்
2. **பேசுதல்**
3. படித்தல்
4. எழுதுதல்

147. தமிழில் ‘எழுத்துத் துணை’ என அழைக்கப்படும் எழுத்து

1. **ள**
2. ை
3. ா
4. ெ

148. படித்தலின் பொருணர் செயல்களில் அல்லாதவை

1. எழுத்துருவை இனங்காணல்
2. பொருண்மைகளைப் புரிதல்
3. **பொருத்தமான சொல்லாட்சி**
4. வெளிப்படும் தகவல்களைப் புரிதல்

149. எழுத்துப் பயிற்சியில் நடு மேல் பகுதி எழுத்துக்களின் எண்ணிக்கை

1. 51
2. 44
3. 58
4. **94**

150. செயல்திட்ட முறையை கற்பித்தலில் நடைமுறைப்படுத்தியவர்

1. ரிச்சர்ட்ஸ்
2. **கில்பாட்ரிக்**
3. ஜான்டூயி
4. மாண்டிச்சோரி

151. நடத்துகின்ற பாடத்தை புரிந்துகொள்வதற்கு மாணவர்களிடம் இத்திறன் அதிகமிருத்தல் வேண்டும்

1. **உணர் திறன்**
2. கேட்டல் திறன்
3. பேசுதல் திறன்
4. எழுதுதல் திறன்

152. தம் எண்ணங்களையும், கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் இம்மொழியில் சிறந்த முறையில் வெளியிட முடியும்

1. கல்வி மொழி
2. **தாய்மொழி**
3. ஆங்கில மொழி
4. சிறப்பு மொழி

153. விளையாட்டு முறையை முதன்முதலாக கையாண்டவர்

1. பிரோபெல்
2. ரூசோ
3. **கால்டுவெல்**
4. பெஸ்டலாசி

154. தனி மாணக்கர் வேற்றுமைக்கும் ஏற்ற முறையாகவும், விரைவாக கற்போருக்கும் சற்று மெதுவாகக் கற்போருக்கும் இம்முறை ஏற்றாக அமைந்துள்ளது

1. கதை முறை படிப்பு
2. நடிப்பு முறை படிப்பு
3. எழுத்து முறை படிப்பு
4. **மேற் பார்வைப் படிப்பு**

155. கல்வி நோக்கங்களின் ஆறு உட்பிரிகளில் கடின நிலை என்பது

1. அறிதல்
2. பயன்படுத்துதல்
3. **மதிப்பிடுதல்**
4. பகுத்தல்

156. ‘இடநிலை’ மாற்றம் என்பது

1. ஆசிரியர் ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்பு செல்லல்
2. மாணவர்கள் அடுத்த வகுப்பிற்கு செல்லுதல்
3. **ஆசிரியர் கரும்பலகையில் எழுதச் செல்லல்**
4. மாணவர்கள் விளையாட்டு திடலுக்குச் செல்லல்

157. மொழிச் சார்புடைய வலுவூட்டிகளில் ஒன்று

1. தப்பு சரியில்லை
2. கவனியாமை
3. வெறுப்புடன் நோக்குதல்
4. “ம்” “ம்”

158. மொழி ஆசிரியருக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத பண்பு

1. குரலில் ஏற்றத் தாழ்வு
2. **மொழிப்பற்று**
3. எழுதும் திறன்
4. எடுத்துக் கூறும் ஆற்றல்

159. செய்யுள் செவி நுகர் கலையே தவிர கண்ணின் மூலம் அனுபவிக்கும் கலையன்று என்று கூறியவர்

1. **ஷெல்லி**
2. அபர்கிராம்பி
3. புளூம்
4. ஸ்கின்னர்

160. மாணவர் வளர்ச்சிக்குப் பெரிதும் முனைவோர் பெற்றோரா? ஆசிரியரா? எனும் இத்தலைப்பு இம்மன்றத்தில் நடைபெறும்

1. இலக்கிய மன்றம்
2. கணிதவியல் மன்றம்
3. **சமூகவியல் மன்றம்**
4. அறிவியல் மன்றம்